# இயல் 7.4 - நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

பயிற்சி எண் :: 7.4.2.3.D


நேர் எதிர் விகிதங்கள் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 4.3.8-9

## நேர் எதிர் விகிதங்கள் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 4.3.8-9

8) ஒரு டசன் (dozen) சோப்புகளின் விலை ₹396 எனில், 35 சோப்புகளின் விலை என்ன?

35 சோப்புகளின் விலையை $x$ எனக்கொள்க.

| | | |
|---|---|---|
| சோப்புகளின் எண்ணிக்கை | 12 | 35 |
| சோப்புகளின் விலை (₹) | 396 | $x$ |




சோப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, சோப்புகளின் விலையும் அதிகரிக்கும். எனவே, இவை **நேர் விகிதத்தில்** அமைந்துள்ளன.

$$\implies \frac{x_1}{y_1} = \frac{x_2}{y_2}$$

$$\frac{12}{396} = \frac{35}{x}$$

குறுக்குப்பெருக்கல் செய்க.

$$12 \times x = 35 \times 396$$

$$x = \frac{35 \times 396}{12} = \frac{35 \times \cancel{396}^{33}}{\cancel{12}_{1}} = 35 \times 33 = \boxed{₹1,155}$$

$$\begin{array}{r} 35 \\ \times\ 33 \\ \hline 105 \\ 105\phantom{0} \\ \hline 1155 \end{array}$$

35 சோப்புகளின் விலை ₹1,155 ஆகும்.

9) ஒரு பள்ளியில் 45 நிமிடங்களைக் கொண்ட 7 பாடவேளைகள் உள்ளன. அப்பள்ளியில் பாடவேளைகள் 9 ஆக மாறும் போது ஒவ்வொரு பாடவேளையின் கால அளவு எவ்வளவு?

பாடவேளைகள் 9 ஆக மாறும்போது ஒவ்வொரு பாடவேளையின் கால அளவை $x$ எனக்கொள்க.

| | | |
|---|---|---|
| பாடவேளைகளின் எண்ணிக்கை | 7 | 9 |
| பாடவேளைகளின் காலஅளவு (நி) | 45 | $x$ |

பாடவேளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, ஒவ்வொரு பாடவேளைகளுக்கும் ஒதுக்கப்படும் கால அளவு குறைகிறது. எனவே, இவை **எதிர் விகிதத்தில்** அமைந்துள்ளன.

$$\implies x_1 \times y_1 = x_2 \times y_2$$

$$7 \times 45 = 9 \times x$$

$$9 \times x = 7 \times 45$$

$$x = \frac{7 \times 45}{9} = \frac{7 \times \cancel{45}^{5}}{\cancel{9}_{1}} = 7 \times 5 = \boxed{35 \text{ நிமிடங்கள்}}$$

பாடவேளைகள் 9 ஆக மாறும்போது ஒவ்வொரு பாடவேளையின் கால அளவும் 35 நிமிடங்களாக குறையும்.

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 13:29 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.